# ஏப்ரல்- 23 - திங்கள்

## புனித ஜோர்ஜ்

**"நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோ 10:10)**

## முதல் வாசகம் :திருத்தூதர் பணி11 : 1 – 18

அக்காலத்தில் பிற இனத்தவரும் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டதைப் பற்றித் திருத்தூதர்களும் யூதேயாவிலுள்ள சகோதரர் சகோதரிகளும் கேள்விப்பட்டார்கள்.பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது,விருத்த சேதனம் செய்துகொண்டவர்கள்"அவரோடு வாதிட்டனர்."நீர் ஏன் விருத்தசேதனம் செய்துகொள்ளாதோரிடம் சென்று அவர்களுடன் உணவு உண்டீர்?" என்று குறை கூறினர்.பேதுரு நடந்தவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிக் கூறத்தொடங்கினார்."நான் யோப்பா நகரில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது மெய்ம்மறந்த நிலையில் ஒரு காட்சி கண்டேன். பெரிய கப்பற்பாயைப் போன்ற ஒரு விரிப்பு நான்கு முனைகளிலும் கட்டப்பட்டு வானத்திலிருந்து இறக்கப்பட்டு என்னிடம் வந்தது.அதை நான் கவனமாக நோக்கியபோது, தரையில் நடப்பன, ஊர்வன, வானில் பறப்பன,காட்டு விலங்குகள் ஆகியவற்றைக் கண்டேன்."பேதுரு, எழுந்திடு! இவற்றைக் கொன்று சாப்பிடு" என்னும் ஒரு குரல் ஒலிப்பதையும் கேட்டேன்.அதற்கு நான், "வேண்டவே வேண்டாம் ஆண்டவரே, தீட்டானதும் தூய்மையற்றதுமான எதுவும் ஒருபோதும் என் வாய்க்குள் சென்றதில்லை" என்றேன்.இரண்டாம் முறையும் வானிலிருந்து மறுமொழியாக, "தூய்மையானது எனக் கடவுள் கருதுவதை தீட்டாகக் கருதாதே" என்று அக்குரல் ஒலித்தது.இப்படி மும்முறை நடந்தபின்பு யாவும் வானத்துக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்நேரத்தில் செசரியாவிலிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூவர் நான் தங்கியிருந்த வீட்டின் முன் வந்து நின்றனர்.தூய ஆவியார் என்னிடம், "தயக்கம் எதுமின்றி அவர்களோடு செல்" என்று கூறினார். உடனே நானும் இந்த ஆறு சகோதரர்களுமாக அந்த மனிதர் வீட்டுக்குச் சென்றோம்.அவர் தம் வீட்டில் வானதூதர் வந்து நின்றதைக் கண்டதாகவும், அத்தூதர் பேதுரு என்னும் பெயர் கொண்ட சீமோனை வரவழையும்நீரும் உம்வீட்டார் அனைவரும் மீட்புப் பெறுவதற்கான வார்த்தைகளை அவர் உம்மோடு பேசுவார் என்று தமக்குக் கூறியதாகவும் எங்களுக்கு அறிவித்தார்.நான் பேசத் தொடங்கியதும் தூய ஆவி முதலில் நம்மீது இறங்கி வந்தது போல் அவர்கள் மீதும் இறங்கி வந்தது.அப்போது, "யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார் ஆனால் நீங்கள் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளை நான் நினைவு கூர்ந்தேன்.இப்போதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டபோது நமக்கு அருளப்பட்ட அதே கொடையைக் கடவுள் அவர்களுக்கும் கொடுத்தார் என்றால் கடவுளைத் தடுக்க நான் யார்?" என்றார்.இவற்றைக் கேட்டு அவர்கள் அமைதி அடைந்தனர் வாழ்வுக்கு வழியான மனம்மாற்றத்தைப் பிற இனத்தவருக்கும் கடவுள் கொடுத்தார் என்று கூறி அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**பதில்பாடல் :** உயிருள்ள இறைவன் மீது என் நெஞ்சம்
தாகம் கொண்டுள்ளது.

## நற்செய்தி : யோவான் 10 : 1 – 10

அக்காலத்தில் இயேசு கூறியது: "நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆட்டுக் கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர்.வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர்.அவருக்கே காவலர் வாயிலைத் திறந்துவிடுவார். ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும். அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார்.தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்தபின் அவர் அவற்றிற்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும்.அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியாது."இயேசு அவர்களிடம் உவமையாக இவ்வாறு சொன்னார். ஆனால் அவர் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.மீண்டும் இயேசு கூறியது "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆடுகளுக்கு வாயில் நானே.எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை.நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர் வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர்.திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன" என்றார்.

**தியானம்:** அலைபாயும் மனங்களுடனும், கண்ணீர் ததும்பும் விழிகளுடனும்,வேதனையான வாழ்வோடும் போராடுகின்ற எம்மைப் பார்த்து ஆறுதல் தருகின்ற யேசுவை இன்றைய நற்செய்தி வாயிலாக நாம் சந்திக்கின்றோம். நாம் நிலை வாழ்வைப் பெறும் பொருட்டு எமக்காக இரத்தம் சிந்தியவர் அவர். அவர் நம்மை மறப்பாரா? நாம் அவரை விட்டு விலகி சென்றாலும் அவர் நம்மை விட்டு விலகுவதும் இல்லை, நம்மை கை விடுவதும் இல்லை. பல நேரங்களில் நாம் இதனை உணராமல் வாழ்கின்றோம், வாழ்வில் இடம்பெறும் சம்பவங்கள் எம்மை நிலை குலையச் செய்கின்றன. அன்று எமது தாயகத்தில் இடம் பெற்றதுபோல் இன்று சிரியாவில் இடம் பெறுகின்றது. பலர் மடிகிறார்கள். பட்டினியால் வாடுகிறார்கள். எம் இனம் அழியும்போது கவன ஈர்ப்பு போராட்டம் நடத்துவோம். உலக நாடுகள் காப்பாற்ற முன்வரவில்லையே என்று அங்கலாய்ப்போம், ஆனால் இன்று எத்தனைபேர் சிரியாவின் அழிவிற்கு குரல் கொடுக்கின்றோம்?. சிரிய மக்களிற்கு கனடா அகதி உரிமை கொடுப்பதைக் கூட குறை சொல்கிறார்கள். தமிழ் மக்களுக்கு கொடுக்கும்போது மட்டும் ஆனந்தம் கொள்கிறோம். இன்றைய முதல் வாசகம் இதனை குறிப்புணர்த்துகின்றது. பேதுரு புற இனத்தாருக்கு யேசுவைப்பற்றி அறிவித்ததை குறை கூறுகிறார்கள். இதே மனநிலைதானே எமக்கும். எம்மைப் படைத்தவர்தானே எல்லோரையும் படைத்தார். அப்படி இருக்க நாடு, மதம் மொழி ,இனம் என்று நாம் வேறு படுத்தலாமா? சிந்திப்போம்.. சிரிய மக்களுக்காமட்டும் அல்லாமல், அடிமைப்படுத்தப்படும் ஒவ்வொருவருக்காவும் செபிப்போம்.

.